KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC - Examination Unit KCC

# தி/கிண்/கிண்ணியா மத்திய கல்லூரி - (தே.பா)

# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் 09

சுட்டெண் .......................................

## இஸ்லாம்

நேரம் : 2 மணித்தியாலங்கள்

### பகுதி I

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. "தவ்ஹீத்" உள்ளடக்கியுள்ள மூன்று பகுதிகளும் முறையே
   1) தவ்ஹீத், ரிஸாலத், மஆத்
   2) அர்ருபூபிய்யத், ரிஸாலத், மஆத்
   3) அர்ருபூபிய்யத், அல்உலூஹிய்யத், அஸ்மா வஸ்ஸிபாத்
   4) தவ்ஹீத், உலூஹிய்யத், மஆத்

2. மறுமை நம்பிக்கையுடன் தொடர்பான நிகழ்வுகளில் ஒன்று.
   1) மஹ்ஷர் 2) ஸகர் 3) பிர்தவ்ஸ் 4) லிவாஉல் ஹம்தி

3. "கப்ளுள் ஜலாலாஹ்" என அழைக்கப்படும் திருநாமம்
   1) அல்ஹாலிகு 2) அர்ரஹ்மான் 3) அல்லாஹ் 4) அர்ரஹீம்

4. ஜனாபத்தை ஏற்படுத்தும் காரணிகளில் அடங்காதது
   1) மரணம் 2) ஹைர் 3) நிபாஸ் 4) மதி

5. ஸக்காத் விதியாவதற்கான நிபந்தனைகள்
   1) தங்கள், வெள்ளி 2) முஸ்லிமாக இருத்தல்
   3) வறுமை நீங்குதல் 4) கால்நடைகள்

6. ஜும்ஆத் தொழுகையின் சிறப்புக்களில் ஒன்று
   1) வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடல் 2) மறுமை நாள் நிகழும்
   3) அலட்சியமாக இருத்தல் 4) ஜுமுஆவில் கதைத்தல்

7. சுவனத்தின் பெயர்களுள் உள்ளடங்காதது
   1) லழா 2) ஹுனூத் 3) பிர்தவ்ஸ் 4) முகாமா

8. ஜனாஸா தொழுகைக்கான தக்பீர்களின் எண்ணிக்கை
   1) 5 2) 7 3) 2 4) 4

9. அல்லாஹ்வின் படைப்பாற்றலுடன் தொடர்பானவை
   1) அர்ரஹ்மான் 2) அர்ரஹீம் 3) அல் ஹாலிகு 4) அஸ்ஸபூர்

10. மறுமை நாளில் நபி (ஸல்) அவர்களுக்குரிய நீர்த்தடாகம்
    1) மகாமுன் மஹ்மூத் 2) ஹவ்முல் கவ்ஸர்
    3) லிவாஉல் ஹம்கி 4) ஸபானத்துல் குப்ரா

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02. பொருத்தமான விடைகளைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

1. ஜனாஸாவுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளுள் ................................ ஒன்றாகும்.
2. ஸக்காத் என்ற சொல் .......................................... என்ற கருத்தைத் தரும்.
3. ஸக்கத் பெறத் தகுதியானோர்களில் ....................................................... அடங்குவார்.
4. மூன்றாவது தக்பீரில் ஜனாஸாவுக்காக ........................................... செய்ய வேண்டும்.
5. ஜாஹிலிய்யாக்கால அரபு மக்கள் தவ்ஹீத் ........................................... ஏற்றிருந்தனர்.
6. அஸ்மாஉல் ஹுஸ்னா 99 ஐயும் குறிப்பிட்டு வந்துள்ள ஹதீஸ் கிரந்தம் ........................... ஆகும்.
7. மறுமை நாளின் பெயர்களுள் ........................................................ ஒன்றாகும்.
8. நரகவாசிகள் சாப்பிடும் உணவு .................................... எனும் ஒரு வகைத் தாவரமாகும்.
9. ஜம்உத் த.்.கீர் என்பது ........................................................ குறிக்கும்.
10. ஸக்காத்தின் பயன்களுள் ............................................................ இதுவும் ஒன்றாகும்.

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02. சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளம் இடுக.**

1. பயணத்தின் போது தொழுகையை கழா செய்து கொள்ள முடியும் ( )
2. குளிக்கும் முன் வுழச் செய்வது சுன்னத்தாகும் ( )
3. நபிமார்களில் சிரேஷ்டமானவர்கள் ரஸூல்மார்களாவார் ( )
4. மரணத்தின் பின்னர் உள்ள வாழ்க்கையே தவ்ஹீதாகும் ( )
5. அர் ரஹீம் என்பது அல்லாஹ்வின் சக்தியுடன் தொடர்பான பண்பைக் குறிக்கும் ( )
6. சுவனத்தின் பெயர்களுள் ஜன்னத்துன் நாமும் ஒன்றாகும் ( )
7. கழா கத்ர் நம்பிக்கை அந்நுபுவ்வாத் பிரிவை சார்ந்ததாகும் ( )
8. அல் ஹதஸுல் அக்பர் என்றால் பெருந்தொடக்கைக் குறிக்கும் ( )
9. பஜ்ருத் தொழுகையை சேர்த்தோ அல்லது சுருக்கியோ தொழ முடியாது ( )
10. தொழுகையோடு இணைத்து ஸக்காத் 83 இடங்களில் அல்குர்ஆனில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ( )

(10 x 1 = 10 புள்ளிகள்)

## பகுதி II

- **பின்வருவனவற்றில் 05 வினாக்களை மாத்திரம் விடையளிக்குக.**

01. 1) ஸக்காத் என்ற சொல்லின் மொழிக்கருத்து யாது?
    2) ஸக்காத்தின் பயன்கள 03 தருக?
    3) ஸக்காத் பெறத் தகுதியானோர்களையும் பட்டியல்படுத்துக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

02. 1) ஒருவர் மரணித்தவுடன் அவருக்கு செய்ய வேண்டிய விடயங்கள் 03 ஐக் குறிப்பிடுக.
    2) ஜனாஸாவுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் யாவை?
    3) ஜனாஸாவுக்கு நிறைவேற்றிய கடமைகளுள் “தொழுவித்தல்” பற்றி சுருக்கமாக குறிப்பிடுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03. 1) மறுமை நாளின் பெயர்கள் 03 ஐக் குறிப்பிடுக?
    2) மறுமை நம்பிக்கையுடன் தொடர்பான நிகழ்வுகளை ஒழுங்குமுறைப்படி எழுதுக.
    3) சுவனம் செல்வதற்கு தடையாக அமையும் சமூக விரோத செயற்பாடுகள் 05 ஐக் குறிப்பிடுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04. 1) ஜனாபத் என்ற சொல்லின் மொழிக் கருத்து
    2) ஜனாபத் உடையோர் செய்யக்கூடாத விடயங்கள் 04 ஐக் குறிப்பிடுக.
    3) ஜனாபத்தை ஏற்படுத்தும் காரணிகள் 05 ஐக் குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05. 1) அல்கஸ்ரு வல்ஜம்உ என்பதன் மொழிக் கருத்து
    2) ஜுமுஆத்தினத்தன்று கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் 03 ஐக் குறிப்பிடுக.
    3) வெள்ளிக் கிழமையின் சிறப்புக்கள் 05ஐக் குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)